## 34: பதினோறு மன்னர்கள்

அவருடைய மரணத்திற்குப் பிறகு மஹாகுலி மஹாதிஸ்ஸா *(Mahácúlí Mahátissa)* என்பவர் பதினான்கு ஆண்டுகள் நீதி நேர்மையுடன் ஆட்சி செய்து வந்தார். தன்னுடைய உழைப்பினால் பெற்ற பணத்தைக் கொண்டு தானங்களை செய்வதுதான் சிறப்பு என நம்பிய மன்னன் தாம் பதவி ஏற்ற ஒரு வருடத்தில் மாறு வேடம் அணிந்து கொண்டு தினமும் சிறிது நேரம் ஒரு வயலில் தொழிலாளி போல வேலை செய்து அதில் கிடைத்த சம்பாத்தியத்தில் மஹாசுமன்னாவுக்கு பிட்சை அளித்தார். அம்பத்தகோலாவின் *(Ambatthakola)* அருகில் இருந்த தங்க மலை எனப்பட்ட சோனகிரியில் இருந்த மூன்று கரும்பாலையில் வேலை செய்து அதில் கிடைத்த கூலியான வெல்லத்தையும் எடுத்து வந்து அதையும் தானமாகக் கொடுக்க ஏற்பாடு செய்தார். அவர் முப்பதாயிரம் *(30,000)* பிட்குக்களுக்கும் பன்னிரண்டாயிரம் *(18,000)* பிட்குணிகளுக்கும் ஆடைகள் தானம் செய்தார்.

அவர் மேலும் ஒரு உன்னதமான விகாராவைக் கட்டிய பின் ஒவ்ஒருவருக்கும் ஆறு ஆடைகள் என அறுபதாயிரம் *(60,000)* பிட்குக்களுக்கும் அறுபதாயிரம் *(60,000)* பிட்குணிகளுக்கும் கொடுத்தார். அதே மன்னன் மண்டவாபி விகாரா, வங்கவாட்டகல்லா *(Vankavattakagalla)* இ திஹபஹுகல்லகா (Dighabahugallaka), மண்டவாபி விகாரா *(Mandavapi)* மற்றும் ஜலாகம *(Jalagama-vihara)* போன்ற விகாராக்களையும் கட்டினார். பதினான்கு வருடங்கள் ஆண்ட பின் தான் செய்த நற் காரியங்களின் விளைவாக சுவர்கத்திற்குச் சென்றார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

வட்டகாமனியின் ஒரு புதல்வாரன கோரனாகா *(Coranaga)* என்பவர் மஹாசுலாவின் *(Mahácúla)* ஆட்சியில் புத்த சமயத்திற்கு மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டவராக இருந்தார். மஹாசுலா மறைந்த பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர் எவரும் வந்து தங்காத பதினெட்டு விகாராக்களை இடித்து விட்டார். பன்னிரண்டு ஆண்டுகள் அந்த மதி கெட்ட மன்னர் ஆட்சி செய்தார். அவருடைய மனைவி கொடுத்த விஷம் கலந்த உணவை உண்டவர் மரணம் அடைந்து லோகதாரிகா *(Lokantarika-hell)* என்ற நரகத்திற்குச் சென்றார்.

அவர் மரணம் அடைந்த பின் மஹாசுலாவின் மகனான திஸ்ஸா என்பவர் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தார். கோரநாகாவின் *(Coranaga)* மனைவியான அனுலா *(Anulá)* என்பவள் அந்த அரண்மனை காவலாளி ஒருவனுடன் இருந்த கள்ளக் காதலினால் தனது கணவனுக்கு உணவில் விஷம் கலந்து கொடுத்து சாகடித்து விட்டதைப் போலவே திஸ்ஸாவிற்கும் உணவில் விஷம் கலந்து கொடுத்து அவரை கொன்ற பின் காதலனுக்கு அந்தப் பதவியைத் தந்தாள்.

அரண்மனை முதல் சுற்றுக் காவலில் இருந்த அந்த காவலாளி அனுலாவை தனது பட்டத்து இராணியாக்கிக் கொண்டு ஒரு வருடம் இரண்டு மாதம் ஆண்ட பின் அவனையும் அவள் விஷம் வைத்துக் கொன்றாள். அதற்குக் காரணம் நகரத்தில் இருந்த தமிலா வடுகா *(Damila Vatuka)* என்ற தச்சனிடம் அவளுக்கு ஏற்பட்டிருந்த காதலே. தமிலா வடுகா பதவி ஏற்றுக் கொண்ட பின் அனுலாவை தனது பட்டத்து இராணியாக்கிக் கொண்டு ஒரு வருடம் இரண்டு மாதம் ஆண்டார்.

மீண்டும் அனுலா அரண்மனைக்கு விறகுகள் சுமந்து வந்த தாரு பாடிக டிஸ்ஸா *(Daru Bhatika Tissa)* என்பவன் மீது காதல் கொண்டு வாடுகாவையும் விஷம் வைத்துக் கொன்ற பின் விறகு சுமந்த டிஸ்ஸாவை ஆட்சியில் அமர்த்தினாள். அவனும் அனுலாவை தனது பட்டத்து இராணியாக்கிக் கொண்டு ஒரு வருடம் ஒரு மாதம் ஆண்டார். மஹாமேஹவனாவில் தெரியாத்தனமாக அவன் ஒரு குளத்தைக் கட்டினான். அதில் சென்று குளித்து வந்த அனுலா அங்கிருந்த பிராமண பூசாரி நிலியா என்ற தமிலாவை கண்டு அவர் மீது காதல் கொண்டதின் விளைவாக தாரு பாடிக டிஸ்ஸாவையும் விஷம் வைத்துக் கொன்று விட்டாள். அதன் பின் நிலியாவிடம் பதவியைத் தர அவரும் அவளை மணந்து கொண்டு ஆறு மாதங்கள் அனுராதபுரத்தில் அவள் பேச்சைக் கேட்டிருந்தபடி ஆண்டு வந்தார். ஆனால் மேலும் மேலும் காம உணர்வு கொண்ட அனிலா அரண்மனை காவலாளிகள் முப்பத்தி இரண்டு பேர்களுடன் உறவு கொள்ளத் துடித்து, நிலியாவையும் விஷம் வைத்துக் கொன்ற பின் தானே அரியணை ஏறி நான்கு மாத காலம் நாட்டை ஆண்டாள்.

ஆனால் அனுலாவின் கொடுமைகளுக்குப் பயந்து அரண்மனையை விட்டு ஓடிப் போய் இருந்த மஹாகுலிகாவின் இரண்டாம் மகனான குட்டகன்னதிஸ்ஸா *(Kutakanna Tissa)* என்பவர் பப்பஜ்ஜா உபதேசம் பெற்று தன்னுடன் ஒரு பெரும் சேனையை திரட்டிக் கொண்டு வந்து அனுலாவைக் கொன்ற பின் இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். அவர் சிடியா மலையில் உபோஸ்தா பண்டிகைக் கொண்டாட பெரிய கட்டிடத்தைக் கட்டியது மட்டும் இன்றி அதன் கிழக்குப்புறமாக ஸ்துாபி ஒன்றையும் கட்டிய பின், போதி மரம் ஒன்றையும் அங்கு நட்டார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

இரண்டு நதிகளுக்கு இடையே பேலகாம விகாராவை *(Pelagamavihara)* அமைத்தார். அதன் பக்கத்திலேயே வானகா *(Vannaka)* மற்றும் அம்படுக்கா *(Ambadugga)*, பயோலுப்பலா *(Bhayoluppala)* போன்ற குளங்களையும் அமைத்தார். நகரை சுற்றி ஏழு கியூபிக் உயர அளவில் பெரிய சுவற்றைக் கட்டி அதன் பக்கத்தில் பெரிய அகழியையும் வெட்டினார்.

அனுலாவின் உடலை எரித்த அரண்டனை வளாகத்திற்கு சற்று தள்ளி இன்னோரு புதிய அரண்மனையை கட்டினார். நகரில் பதுமாசுர *(Padumassara)* என்ற பெயரில் பூங்காவைக் கட்டினார். அவருடைய தாயார் தன்னுடைய இளம் வயதிலேயே, அதாவது முதலில் பல் துலக்கத் துவங்கிய கால கட்டத்திலேயே புத்த சமயத்திற்கு வந்து விட்டவள். அதனால் தன்னுடைய குடும்ப நிலத்தில் அவருடைய தாயாருக்காக கன்னி மடாலயம் ஒன்றைக் கட்டி அதன் பெயரை தண்டகேஹா *( பல் வரிசை வீடு)* என வைத்தார்.

அவருடைய மரணத்திற்குப் பின் இளவரசர் பட்டிகபைய்யா *(Bhatikabhaya)* என்பவர் ஆட்சி பொறுப்பை ஏற்று இருபத்தி எட்டு ஆண்டுகள் ஆண்டார். அவர் மஹாதாதிக்கா *(Mahadathika)* என்ற நேர்மையான மன்னருடைய சகோதரர் என்பதினால் அவருடைய பட்டப் பெயர் படிகராஜா *(Bhatikaraja)* என ஆயிற்று. அவர் லோஹபாதசாதாவை சீர்படுத்தி இரண்டு வேடிகாக்களைக் *(vedikas)* கட்டினார். அங்கு கட்டப்பட்ட உபோசதாவின் *(உபதேச மண்டபம்)* பெயரை ஸ்துாபியின் நிவைாக துாபராமா *( Thuparama)* என வைத்தார்.

நகரைச் சுற்றி ஒரு யோஜனை துாரத்திற்கு சுமன்னா மற்றும் உஜ்ஜுக்கா போன்ற இரண்டு விதமான மல்லிகை மலர்

செடிகளை நட்டு வளர்க்கும்படி ஆணையிட்டார். மக்கள் மீது சுமத்தப்பட்டிருந்த பல வரிகளை விலக்கினார். வேடிகாவின் கீழ் பகுதியில் இருந்து சிடியாவின் மேல் பகுதி வரை இருந்த பாதையின் இருபுறமும் இருந்த சுவர்கள் மீது நாலு விரல் அளவு ஒரு விஷேச தைலத்திலான கலவைப்பூச்சு போடச் சொல்லி அந்த இடத்தில் நறுமணம் தந்த மலர்ச் செடிகளை மிகவும் அடர்த்தியாக வைக்கச் சொல்லி அந்த ஸ்துாபி இருந்த இடத்தை மலர் பூமி போல் ஆக்கினார்.

இன்னொரு முறை சிடியா முழுவதும் எட்டு விரல் அளவு தடிமனாக அந்த விஷேச தைலப்பூச்சு போடச் சொல்லி அனைத்து இடத்தையும் மலர் சோலையாக்கினார். அபய்யா ஏரியில் இருந்து குழாய் மூலம் தண்ணீர் எடுத்து வந்து ஸ்துாபி மீது நீர் பொழிந்த வண்ணம் இருக்கும் விதத்தில் செயற்கை நீருற்று வைக்க ஏற்பாடு வைத்தார். நுாறு வண்டி நிறைய வந்த முத்தை விஷேச எண்ணை தடவிய கயிற்றில் மிக நெருக்கமாகக் கோர்க்கக் கூறி ஸ்தாபாவிற்கு அந்த மாலையை அர்பணித்தார். சிடியாவை சுற்றி பவழம் மற்றும் தங்கத்திலான பூக்களை வலைபோல பின்னிப் போட்டு வணங்கி வந்தார்.

ஒரு முறை புனித அறையின் உள்ளே பல அரஹன்துக்கள் ஒருமித்த குரலில் எதோ ஓதிக் கொண்டு இருந்தது போல உணர்ந்தவர் அவர்களை தானனால் பார்க்க முடியவில்லை என்றால் அங்கிருந்து போகக் கூடாது என முடிவு செய்து உண்ணாவிரதத்தில் அமர்ந்து விட்டார். அதனால் தேராக்கள் விஷேசமான நுழை வாசல் அமைத்து அவரை புனித அறைக்கு உள்ளே அழைத்துச் சென்று காட்டினர். உள்ளே சென்று திரும்பியவர் தாம் கண்ட காட்சிகளைப் போன்ற உருவச்

சின்னங்களை சிடியாவில் அமைக்க சொல்லி காட்சிப் பொருட்களாக அவற்றை வைத்தார்.

சிடியாவிலும் அதைச் சுற்றியும் தேன் கூடுகள், வாசைன தரும் மலர்கள், மலர் கொத்துக்களுடன் கூடிய குடுவைகள், முட்டி அளவு நீரில் வரிசையாக மிதந்து கொண்டிருந்த தாமரை மலர்கள் போன்றவை இருந்தன. அவற்றைத் தவிற வெண்ணையில் ஊற வைத்த திரிகளை உபயோகித்து ஏற்றி வைக்கப்பட்ட தீபங்கள், மதுகுலா *(madhuka)* என்ற எண்ணையிலும், நல்லெண்ணையிலும் ஏற்றப்பட்ட விளக்குகள் என அனைத்தும் ஸ்துபாவிற்கு அழகு சேர்க்க, அங்கு ஏழு வேளைகள் நிவேத்தியம் படைக்கப்பட்டன.

ஒவ்ஒரு வருடமும் தொடர்ந்து கட்டிடம் வெள்ளையடிக்கப்பட்டு வண்ணம் பூசி பராமரிக்கப்பட்டது. அது முடிந்ததும் அதை கொண்டாடும் விதத்தில் அங்கு விழா கொண்டாடப்பட்டது. அது போல போதி மரத்திற்கும் பூஜைகள் செய்யப்பட்டு விழா நடைபெற்றது. அதைத் தவிற ஸ்துபாவின் பெருமையை பறைசாற்றும் வேசக பண்டிகைகள் *(Vesakha-festivals)* என்ற பெயரில் இருபத்தி எட்டு பண்டிகைகளும், எட்டாயிரத்து நான்கு சிறிய பண்டிகைகளும் கொண்டாடப்பட்டன. அந்த விழாக்களில் நடனமாடுவோர், பல்வேறு வாத்திய- இசைக் கலைஞர்கள், போன்றவர்கள் பங்கேற்றனர். தினமும் மூன்று முறை அந்த இடத்திற்குச் சென்று புத்தரை வணங்கி மலர்க் மத்தளம் *(flower-drum)* என்ற பெயரில் மலர்கள் தூவி அதை ஆராதித்தார். புத்த சமய போதனைகள் செய்து கொண்டு இருந்தவர்களுக்கு நிறைய வெகுமதிகள் தொடர்ந்து வழங்கப்பட்டன. அது போல பாவரன சடங்குகளிலும் *(pavarana-ceremony)* தானங்கள் தரப்பட்டன. துறவிகளுக்கு

எண்ணை, வெல்லம், ஆடைகள் போன்றவை தாராளமாக வழங்கப்பட்டன. ஒன்று பழுதடைந்து விட்டால் இன்னொன்று இருக்கட்டும் என்பதற்காக அனைத்து நகர்களிலும் சிடியாக்கள் கட்ட நிறைய இடங்கள் ஒதுக்கப்பட்டன. பப்பத்தாவில் தினமும் ஆயிரம் பிட்குக்களுக்கு அடையாள அட்டைகள் தரப்பட்டு உணவு வழங்கப்பட்டன. அரண்மனை, சிட்டபட்டன்பாசதா *(Cittupatthanapasada)*, மனியுபட்டன்பாசதா *(Maniupatthanapasada)*, பதுமா வீடு *(Paduma-house)* மற்றும் சட்டப்பாசதா *(Chattapasada)* போன்ற ஐந்து இடங்களில் புனித பிட்குக்களுக்கு மரியாதைகள் செய்யப்பட்டு அவர்களுக்குத் தேவையான பொருட்கள் தரப்பட்டன. மேலும் தனக்கு முந்தைய மன்னர்கள் புத்த சமயத்தின் மேன்மைக்காக செய்து வந்திருந்த அனைத்துக் நற் காரியங்களையும் மன்னன் படிகாவும் *(Bhatika)* தொடர்ந்து செய்து வந்தார்.

படிகராஜா மரணம் அடைந்தப் பின் அவருடைய இளைய சகோதரர் மஹாதீதிக மஹாநகரா *(Mahadathika Mahanaga)* என்பவர் பன்னிரண்டு ஆண்டுகள் பற்பல நற் பணிகளை செய்தவாறு ஆண்டார். ஸ்துாபாவை கிளின்சிகா பாறைகளைக் *(kincikkha-stones)* கொண்டு பலப்படுத்தினார். சுற்றிலும் இருந்த நடை பாதைகளில் போடப்பட்டு இருந்த மண்ணிற்கு பதில் நல்ல தளம் அமைத்தார். விகாராக்களில் சமய போதனைகள் செய்பவர்களின் வசதிக்காக ஆசனங்கள் செய்து தந்தார். தியான மண்டபம் இருந்த கட்டிடம் வலுவாக இல்லை என்பதினால் அங்கு அம்பத்தால ஸ்துாபியைக் *(Ambatthala-thupa)* கட்டினார். அவர் தியானம் செய்து கொண்டிருந்த பொழுது அவர் மீது மேலிந்த கட்டிடத்தில் இருந்து கற்கள் உடைந்து விழுந்ததினால் அதைக் கட்டினார். இப்படியாக அந்த கட்டிடத்தை வலுவாகக் கட்டிய பின் நான்கு

நான்கு வாயில்களிலும் அற்புதமான இரத்தினங்கள் பதித்த அலங்கார வளைவுகளை அமைக்க ஏற்பாடுகள் செய்தார். சிடியாவை சுற்றி ஒரு யோஜனை துாரத்திற்கு நான்கு நுழை வாயில்களை அமைத்து அற்புதமான சாலைகளை கட்டச் செய்து அந்த சாலையின் இருபுறமும் கடைகளை நிறுவச் சொன்னார். அந்த சாலையின் வழி நெடுங்கிலும் அங்காங்கே வரவேற்பு வளைவுகள், அலங்காரத் தோரணங்கள், கொடிகள், என பலவும் அமைக்கப்பட்டது. அது மட்டும் அல்ல சாலை விளக்குகள் அனைத்து இடங்களிலும் , ஏன் ஒரு யோஜனை துாரத்திற்கு கடலிலும் கூட போடப்பட்டன. குடம்பா நதியில் இருந்து சிடியா மலைப் பகுதி வரை போடப்பட்டிருந்த சாலையில் மக்கள் நடந்து செல்ல கம்பளம் போடப்பட்டு இருந்தது. சிடியா சீரமைக்கப்பட்ட பின் நடந்தேறிய விழாவிற்கு இவ்விதமான வசதிகளை செய்திருந்த மன்னன் , அந்த நிகழ்சியை கிரிபந்தா காணிக்கை *(Giribhanda-offering)* என அழைத்தார்.

புத்த பிட்குக்களுக்கு தானங்களை கொடுக்க எட்டு இடங்களில் ஏற்பாடு செய்திருந்த அந்த இராஜ்யத்தின் அதிபர், தங்கத்திலான மேளத்தினை அடித்து புத்த பிட்குக்களை அங்கு நடந்த விழாவிற்கு அழைத்து அங்கு வந்த இருபத்தி நாலாயிரம் பிட்குக்களுக்கு தானம் தந்தார். ஒவ்ஒரு பிட்குவிற்கும் ஆறு உடைகளைத் தந்தும், சிறையில் இருந்தவர்களுடைய தண்டனைக் காலத்தைக் குறைத்தும் நற்பணிகள் செய்தார். நான்கு வாசல்களிலும் அமர்ந்திருந்த முடி வெட்டும் தொழிலாளிகளுக்கு அந்த இடங்களிலேயே நிரந்தரமாக தங்கிக் கொண்டு தமது தொழிலை செய்து கொண்டிருக்கவும் அதிகாரம் கொடுத்தார். அவருடைய முன்னோர்கள் செய்து வந்திருந்த நல்ல பணிகளை அவருடைய

அவருடைய மூத்த சகோதரர் முடக்கி வைத்திருந்தார். ஆகவே நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த அந்த பணிகளை மீண்டும் துவக்கி அனைத்தையும் முடித்து வைத்தார். புத்த பிட்குக்களிடம் தன்னையும், தன்னுடைய மனைவி, இரு மகன்கள், பட்டத்து யானை, நாட்டு குதிரை போன்றவற்றையும் மன்னன் அர்பணிக்க முயன்ற பொழுது அதை ஏற்க மறுத்த பிட்குக்கள் அதை தடுத்து நிறுத்தினார்கள்.

புத்த பிட்குக்களுக்கு ஆறு லட்ச *(6,00,000)* செலவிலும், பிட்குணிகளுக்கு ஒரு லட்ச *(1,00,000)* செலவிலும் அவரவர் தேவைகளுக்கேற்ப பல தானங்களை செய்தார். கல்யானகானிக்காவில் *(Kalayanakannika)* இருந்த மன்னன் மனினகபப்பட்தா *(Maninagapabbata)* மற்றும் கபுகண்டா *(Kubukanda)* என்ற விகாராக்களையும் கட்டினார். நதிப் பக்கத்தில் சமுத்த விகாராவையும் *(Samudda-vihara)* , ரோஹன்னாவில் இருந்த ஹுவககானிக்கா *(Huvacakannika)* என்ற இடத்தில் குலநாகபப்பட்டா *(Culanagapabbata)* என்ற விகாராவையும் கட்டினார். முன்னர் பாசனதீபகா *(Pasanadipaka)* என்ற விகாராவுக்கு சென்றிருந்த பொழுது மன்னனுக்கு அங்கிருந்த ஒரு சாமனீரா தண்ணீர் கொடுத்து உதவியதால் அரை யோஜனை தூர காலி நிலத்தை அவர் தங்கி இருந்த அந்த விகாராவுக்கு தானமளித்தவர், அதை பிட்குக்களின் உபயோகத்திற்கென பயன் படுத்துமாறு கூறினார். அது போலவே மண்டவாபி *(Mandavapi)* என்ற விகாராவில் தமக்கு உதவிய மற்றோரு சாமனீராவின் விகாராவுக்கும் அங்கிருந்த பிட்குக்களின் உபயோகத்திற்கென நிலம் கொடுத்தார்.

எவர் ஒருவர் அனைவரிடமும் ஒருமித்தக் கருத்துக்களுடன்

ஒன்றிணைந்து வாழ்கின்றாரோ, மமதையையும், சோம்பேறித்தனத்தையும் வெற்றி கொண்டு, சிற்றின்ப ஆசைகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்கின்றாரோ, அப்படிப்பட்டவர் ஆட்சிப் பொறுப்பேற்றால் மக்கள் ஒருவரும் துன்பத்தைத் அனுபவிப்பதில்லை. அப்படிப்பட்ட ஆட்சியாளர்கள் நல்ல துாய்மையான காரியங்களையே நம்பிக்கையுடன் செய்வார்கள் என்பதில் ஐயம் இல்லை.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் முப்பத்தி நான்காம் பாகமான 'பதினோரு மன்னர்கள்' என்ற பகுதி முடிவுற்றது.



ஓவியர் பார்வையில் அன்றைய
புத்த பிட்குக்கள்